# புதிய கல்வியாண்டு (2023/2024) மாணவர்களின் திசைவழிகாட்டலும், மாணவர் வரவேற்புக் கலைநிகழ்வும்.

சேர் பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தின் புதிய கல்வியாண்டு (2023/2024 ) மாணவர்களுக்கான வரவேற்பு, திசைவழிகாட்டல் நிகழ்வுகள் 16.02.2026 - 18.02.2026 வரை மூன்று தினங்கள் நடைபெற்றன




வரவேற்பு நிகழ்வானது 16.02.2026 அன்று காலை 9:00 மணியளவில் மருத்துவ பீட கூவர் கலையரங்கில், சேர் பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தின் பீடாதிபதி, திரு.த. றொபேட் அருட்சேகரன் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர். சி.ஸ்ரீ சற்குணராஜா அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு.வி.காண்டீபன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதில் நூலகர் முனைவர் திருமதி மைதிலி விசாகரூபன், மாணவர் நலச்சேவைகள் கிளைப் பணிப்பாளர் பேராசிரியர்.க.சசிகேஷ் ,மாணவர் ஒழுக்காற்று அதிகாரி கலாநிதி.ஆ.மஞ்சீவன்,மாணவர் ஒன்றியத் தலைவர் திரு.சி.நித்தியானந்தம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரைகளை வழங்கியிருந்தனர். வரவேற்பு நிகழ்வுகளைத் தொடர்ந்து பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்கள் அறிந்திருக்க வேண்டிய முக்கிய இடங்களை அறியப்படுத்தும் முகமாக மாணவ ஆலோசகர்களின் வழிகாட்டலில் பல்கலைக்கழக வளாகத்திலுள்ள முக்கிய இடங்களுக்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.







இரண்டாம் நாளில் புதிய கல்வியாண்டு மாணவர்களின் திசைவழிகாட்டல் நிகழ்வானது சேர் பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தில் சிற்பத்துறைத் தலைவர் திரு.மா.மனோகர் தலைமையில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கலாக அத் துறைசார்ந்தோரால் சிறப்புரைகள் வழங்கப்பட்டன.

1. நூலகமும் மாணவர்களும் - திரு.பொ.பூலோகநாதன் - துணை நூலகர், சேர் பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடம்



2. மாணவர் நலச் சேவைகளும் மாணவர் விடுதி விதிமுறைகளும் - திருமதி.ஜா.கி.அரவிந்தராஜ், சிரேஷ்ட உதவிப் பதிவாளர், நலச் சேவைகள் கிளை.
3. மாணவர் ஒழுக்காற்று விடயங்கள் - திரு.விஜேந்திரன், திரு.கஜந்தன் , மாணவர் ஒழுக்காற்று அதிகாரிகள், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

4. மாணவர் சுகாதார நலன் தொடர்பான ஆலோசனைகள் - வைத்தியர்.திருமதி.க.இராஜேஸ்வரி. வருகைதரு பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி
5. விளையாட்டு செயற்பாடுகளில் மாணவர்களின் வகிபங்கு – பணிப்பாளர், உடற்கல்வி அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
6. பரீட்சை விதிமுறைகள் - திரு.ந.ஆறுமுகதாஸ், பிரதிப் பதிவாளர், சேர் பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடம்



மூன்றாம்நாளில் புதிய கல்வியாண்டு மாணவர்களை வரவேற்கும் முகமாக இசைத்துறைத்தலைவர் முனைவர்.சி. சூரியகுமார் அவர்களின் தலைமையில் சேர் பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தின் வாத்திய இசைத்துறை, இசைத்துறை, நடனத்துறை, நாடகமும் அரங்கக் கலைகளும் துறை மாணவர்களின் பங்களிப்புடன் கலைநிகழ்வுகள் இடம் பெற்றன.













